*அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்*
*International Institute of Tamil Arts*

# தமிழ்க்கலைத் தேர்வு - 2019

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஆறு

## நேரம்: 210 நிமிடங்கள்

**முதலாம் வினாவிற்கும், ஏனையவற்றுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. தாளதசப் பிராணன்களைக் குறிப்பிட்டு, அவற்றில் ஜதி எத்தனை வகைப்படும் எனத் தருக.

   ஆ. ஜதியின் வகைகளை உதாரணத்துடன் விளக்குக.

   இ. கோபுச்ச ஜதியை இறுதியாகக் கொண்ட ஆதிதாளம் நான்கு ஆவர்த்தனக் கோர்வை ஒன்றினை தாள அங்க குறியீட்டுடன் எழுதுக. (20 புள்ளிகள்)

2. பின்வரும் கலைச்சொற்களை விளக்குக.
   1. ஜாவளி 2. பதம் 3. கும்மி 4. புல்லாங்குழல்

   (16 புள்ளிகள்)

3. கேரள மாநிலத்துக்குரிய ஆடல் வகையினைக் குறிப்பிட்டு அவ் ஆடலுக்குரிய தோற்றம், வளர்ச்சி, சமயப்பின்னணி, இசை, உடை, அரங்க வெளிப்பாடு இவற்றினைத் தொகுத்து விளக்குக. (16 புள்ளிகள்)

4. பரத நாட்டியக் கச்சேரியில் பயன்படும் பிரதான லய வாத்தியக் கருவியின் அமைப்பு, பங்களிப்புப்பற்றி விளக்குக. (16 புள்ளிகள்)

5. இலங்கையின் பரதக்கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றி மறைந்த கலைஞர்களைக் குறிப்பிட்டு, அவர்களுள் நீர் விரும்பும் இருவரின் கலைப்பணி பற்றி விபரிக்குக. (16 புள்ளிகள்)

6. நீர் கற்ற தோடயமங்களத்தின் இராக, தாளங்களைக் குறிப்பிட்டு, முதலாவது கண்டிகைக்குரிய சாகித்தியத்தின் கருத்தினையும், கண்டிகையின் இறுதியில் வரும் தீர்மானப் பகுதியைத் தாள அங்கக் குறியீட்டுடனும் எழுதுக. (16 புள்ளிகள்)

7. கூத்துகளைக் குறிப்பிட்டு, வடமோடிக் கூத்தின் ஆட்டமுறைகள், உடை, ஒப்பனை, அணிசேர் கருவிகள் பற்றி விளக்குக. (16 புள்ளிகள்)

8. பரத ஆற்றுகையின்போது இறுவெட்டின் செல்வாக்கோ அல்லது அணிசேர் கலைஞர்களின் பங்களிப்போ ஆற்றுகையை முழுமைப்படுத்துகிறது என்பதனை ஆராய்க.

   (16 புள்ளிகள்)